**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**அசல் வழக்கு எண். 25/2023**

**வா.சா.1**

நாள்: **19.10.2024**

2024ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய திருமதி. அசோகமாலா என்பவரின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி திரு. எஸ். குமரகுரு, பி.எல்., ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அசோகமாலா | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

முதன்மை விசாரணை:

நான் இந்த வழக்கின் வாதி. எனது முதன்மை விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தயார் செய்து தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனது தகவலின் பேரில் தயார் செய்யப்பட்டு அதை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

ஆவணங்கள்

1) கொடிவழி ஜாபிதா வா.சா.ஆ.1
2) 10.07.2012ம் தேதி ஏற்பட்ட காளியம்மாளின் இறப்புச்சான்றிதழ் அசல் வா.சா.ஆ.2
3) 20.07.2012ம் தேதி ஏற்பட்ட காளியம்மாளின் வாரிசு சான்றிதழ் அசல்

வா.சா.ஆ.3

4) 19.09.1999 ம் தேதி ஏற்பட்ட பாக பிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4
5) 14.05.1987 ம் தேதி ஏற்பட்ட உயில் ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5
6) 15.12.2022 ம் தேதி வாதிகள் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.6
7) 15.12.2022 ம் தேதி பிரதிவாதிகளுக்கு வாதி வழக்கறிஞர் அறிவிப்பினை அனுப்பியதற்கான அஞ்சலக ரசீது அசல் வா.சா.ஆ.7
8) 16.12.2022 ம் தேதி வாதியின் வழக்கறிஞர் அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான Track Report வா.சா.ஆ.8
9) 20.12.2022 ம் தேதி வாதிக்கு பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் வா.சா.ஆ.9

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் என்னுடைய முதல் பிரமாணப்பத்திரத்தில் உள்ள கையெத்து என்னுடையது தான். அதில் உள்ள விவரங்களை எனது வழக்கறிஞர் எனக்குச்சொல்லி நான் தெரிந்துகொண்டேன். எனக்கு நேரடியாக எந்த விவரமும் தெரியாது. காளியம்மாள் எனது தாயார். வா.சா.ஆ.1 ஆன கொடிவழி ஜாபிதாவில் காட்டப்பட்டுள்ள நபர்கள் அனைவரும் திருமணம் ஆகி அவர்களது தனித்தனியாக வசித்து வருகிறார்கள். எனது உடன் பிறந்த சகோதரர்கள் விஜயசுந்தரம், பாலகிருஷ்ணன் ஆகியோர்கள் என்றால் சரிதான். அவர்கள் தற்பொழுது இலங்கையில் வசித்து வருகிறார்கள். விஜயசுந்தரத்திற்கு மட்டும்தான் வாரிசு உள்ளார்கள். விஜயசுந்தரத்தின் வாரிசுகளை இந்த வழக்கில்

நான் தரப்பினராக சேர்க்கவில்லை.

தாவாவில் காட்டப்பட்டுள்ள வழக்குச்சொத்தானது எனது தாயாருக்கு உயில் மூலமாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் அந்த விவரம் எனக்குத் தெரியாது. தாவா சொத்தானது காளிமுத்து கன்காணி மகள் ராக்கன் மனைவி மாரியாயிக்கு 1987 ம் வருடம் உயில் வழி மூலமாக கிடைத்த சொத்து என்று சொன்னால் சரிதான். அந்த சொத்துக்களை மேற்படி மாரியாயி குழந்தைகளுக்கு பிரித்து கொடுத்தார் என்றால் சரிதான். அதே போன்று காளியம்மாளும் அவர்களுடைய குழந்தைகளுக்கு சொத்துக்களை பிரித்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். 1985 ம் வருடம் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் A செட்யூலில் ககாட்டப்பட்டுள்ள சொத்துக்கள் இந்த வழக்கின் தாவா சொத்து என்றால் அந்த விவரம் எனது வழக்கறிஞரை கேட்டால்தான் தெரியும்.

தாவா 4 வது இலக்க சொத்தை காளியம்மாள் இந்த பிரதிவாதிக்கு இனாம் செட்டில்மெண்ட் மூலம் எழுதி வைத்துள்ளார் என்றால் அந்த விவரம் எனக்குத் தெரியாது. தாவா 1, 2 மற்றும் 3 இலக்க சொத்துக்கள் குறித்து காளியம்மாள் இந்த பிரதிவாதிக்கு உயில் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் அந்த விவரம் எனக்குத் தெரியாது. இந்த வழக்கில் எங்களுக்குள்ள பாகத்தை கோரித்தான் பாகப்பிரிவை வழக்கினை தாக்கல் செய்துள்ளோம்.

31.07.2009 ம் தேதி தாவா 1 முதல் 3 இலக்க சொத்துக்களை காளியம்மாள் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த உயில் ஆவணத்தை ரத்து செய்ய வேண்டும் என்று நான் பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். மேலும் 19.08.2010 ம் தேதி தாவா 4 வது இலக்க சொத்தை குறித்து காளியம்மாள் தனது மகனான பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்ற பரிகாரம் கோரி நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களை அனைத்தும் பிரதிவாதிக்கு உயில் ஆவணயம் மூலமாகவும், இனாம் செட்டில் மெண்ட் ஆவணம் மூலமாகவும்

அவரது பாத்தியத்தில் இருந்து வருகிறது என்று சொன்னாலும், வருவாய் ஆவணங்கள் அனைத்தும் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .